நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, எல்.எல்.எம்.,

நீதித்துறை நடுவர், மேலூர்

**2026**-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் **19**-ஆம் நாள் புதன்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.**115/2016**

**CNR.No. TNMD16-000655-2016**

…

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக காவல் ஆய்வாளர்<br>ஒத்தக்கடை காவல்நிலையம்,<br>குற்ற எண்.57/2016 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | பிரேம்ஆனந்த், (வயது 34/2026)<br>த/பெ.போஸ்,<br>சோழம்பதி,<br>புதுதாமரைப்பட்டி அஞ்சல்,<br>கிழக்கு தாலுகா,<br>மதுரை மாவட்டம். |
| குற்றம் முறையிடப்பட்டது | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 324, 506(2). |
| குற்றம் வனையப்பட்டது | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 324-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளன. |
| எதிரிகள் காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : | Obtained anticipatory bail in Crl.M.P. No.651 of 2016, dated 03.02.2016 as per order of the Hon'ble Principal Sessions Judge, Madurai. |
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | 10.11.2016 |
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு | : | 1) U/s.311 Cr.P.C in Crl.M.P.No.1197 of 2026 = Allowed.<br><br>2) U/s.320 Cr.P.C in Crl.M.P.No.1065 of 2026 = Dismissed.<br><br>3) U/s.70(2) Warrant Recall = Allowed. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | : | |

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 23.07.2026 | 23.07.2026 |
| PW2 | 17.08.2026 | 17.08.2026 |



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.19 08:10:19 +0530

| | | |
|---|---|---|
| குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் | : | 18.08.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் | : | 18.03.2021 to 07.03.2025 |
| மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | : | Nil |
| தீர்மானம் | : | எதிரி இ.த.ச பிரிவுகள் 294(பி), 324-ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானம். |
| தீர்ப்பு | : | முடிவாக, இந்த வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 324-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. இந்த வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை. |

இவ்வழக்கானது கடந்த 11.11.2016-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 19.08.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.கீர்த்தி பிரசன்னா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை :-</u>

எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 324-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளன.

**1)** <u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u> **:**

கடந்த 28.01.2016-ம் தேதி இரவு 9 மணியளவில் புதுதாமரைப்பட்டி பஸ் ஸ்டாப் அருகில் உள்ள பாபு என்பவரது வடை கடைக்கு சென்று, இவ்வழக்கின் 1-வது சாட்சி ஜெயராமன் மகன் அருண்பாண்டி என்பவர் வடை வாங்கி சாப்பிட்டு கொண்டிருக்கும்போது, அங்கு வந்த எதிரி



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.19 08:10:24 +0530

வாதி அருண்பாண்டியிடம் வடை வாங்கி தர சொல்லியும், அத்துடன் பழைய பாக்கியையும் கொடுக்க சொல்லி பிரச்சனை செய்துள்ளார். அதற்கு வாதி அருண்பாண்டி காசு இல்லை என்று கூற, அதையே விரோதமாக கொண்டு, எதிரி வாதி அருண்பாண்டியை பார்த்து எனக்காடா காசு இல்லை என்று சொல்கிறாய், நீ வீட்டுக்கு போகமாட்டாய் என்று சொல்லி, கடை அருகில் கிடந்த விறகு கட்டையை எடுத்து, அருண்பாண்டியின் தொடையில் அடித்து நெஞ்சில் குத்தி கீழே தள்ளிவிட்டு, அருகில் இருந்த பெரிய கல்லை எடுத்து வாதியின் நெஞ்சிலும், தலையிலும் தாக்கி ரத்தகாயம் உண்டுபண்ணிய குற்றம் புரிந்ததாக ஒத்தக்கடை காவல்நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.115/2016 ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 324-ன்படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 03.06.2025 அன்று எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது எதிரி குற்றத்தை மறுத்துரைத்துள்ளார். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1-ம், அ.சா.2-ன் மூலம் அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**<u>4) அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்</u> :-**

**4.1)** அ.சா.1 அருண்பாண்டியன் தனது சாட்சியத்தில் தான் தற்போது புதுதாமரைப்பட்டியில் குடியிருந்து கொண்டு பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என்றும், சாட்சிகள் பாபு, ராஜ்பாண்டி ஆகியோர்களை தனக்கு தெரியும் என்றும், சாட்சி ஜெயராமன் தனது அப்பா என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், சுமார் 10 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை 7 மணியளவில் தானும், எதிரி பிரேம் ஆனந்த் என்பவரும் புதுதாமரைப்பட்டி பஸ் ஸ்டாண்ட் அருகே நின்றுகொண்டிருந்தபோது தங்களுக்கு இடையே வாய்தகராறு ஏற்பட்டது



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.19 08:10:29 +0530

என்றும், தாங்கள் தற்போது சமரசமாக சென்றுவிட்டார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**4.2)** அ.சா.2 தமிழ்செல்வம் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனியப்பன் ஓய்வு பெற்றுவிட்டபடியாலும், இவ்வழக்கின் மேல்விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் சிவாஜிகணேசன் பணி மாறுதலில் சென்றுவிட்டதாலும், வழக்கு தரப்பினர்கள் நீதிமன்றத்திற்கு வெளியே பேசி சமாதானம் ஆகிவிட்டதாலும், அதன் அடிப்படையில் அரசு தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டபடியால், வழக்கு 10 வருடகாலமாக நிலுவையில் இருந்து வருவதனால் நீதியின் நலன் கருதி வழக்கின் விசாரணையை விரைந்து முடிப்பதற்காக அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311-ன் கீழ் கூடுதல் சாட்சியாக விசாரிக்க மனு தாக்கல் செய்யப்பட்டு மாண்பமை நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில் வழக்கு கோப்பினை பார்த்து ஆவணங்களின் அடிப்படையில் தான் தற்போது கூடுதல் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறார் என்றும், கடந்த 29.01.2016-ம் தேதி 21.30 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனியப்பன் நிலைய பொறுப்பில் இருந்தபோது புகார்தாரர் அருண்பாண்டியன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண்.57/2016, பிரிவுகள் 294(பி), 324, 506(2) இ.த.ச-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், புகார் மனு அ.சா.ஆ.2 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரவிக்குமார் மற்றும் ரஞ்சித்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் சார்பு ஆய்வாளர் அன்றையதினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் அருண்பாண்டியன், பாபு ராஜீவ்பாண்டி, ஜெயராமன், ரவிக்குமார், ரஞ்சித்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், எதிரி மாண்புமிகு, மதுரை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றுள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கினை சார்பு ஆய்வாளர் சிவாஜிகணேசன் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சிறப்பு சார்பு ஆய்வாளர் விசாரித்த அனைத்து சாட்சிகளையும் விசாரணை செய்ததில் சாட்சிகள் அவரிடம் கூறியதுபோலவே சார்பு ஆய்வாளரிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், பின்னர் இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து 15.09.2016-ம் தேதி எதிரிக்கு எதிராக பிரிவுகள்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.19 08:10:33 +0530

294(பி), 324, 506(2) இ.த.ச-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5)** <u>கு.வி.மு.ச பிரிவு **313(1)(b)-**ன் கீழான விசாரணை</u>

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டார். மேலும் அவர் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார். அதனால் எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**6)** <u>அரசு தரப்பு வாதம் பின்வருமாறு:</u>

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி தான் குற்றம் புரிந்துள்ளார் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி மீது உள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்.

**7)** <u>எதிரி தரப்பில் வாதம் பின்வருமாறு:</u>

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே எதிரி மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**8)** <u>தீர்வு</u>**:-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**9)** அரசு தரப்பு வழக்குப்படி, கடந்த 28.01.2016-ம் தேதி இரவு 9 மணியளவில் புதுதாமரைப்பட்டி பஸ் ஸ்டாப் அருகில் உள்ள பாபு என்பவரது வடை கடைக்கு சென்று, இவ்வழக்கின் 1-வது சாட்சி ஜெயராமன் மகன் அருண்பாண்டி என்பவர் வடை வாங்கி சாப்பிட்டு கொண்டிருக்கும்போது, அங்கு வந்த எதிரி வாதி அருண்பாண்டியிடம் வடை வாங்கி தர சொல்லியும், அத்துடன் பழைய பாக்கியையும் கொடுக்க சொல்லி பிரச்சனை செய்துள்ளார்.



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.19 08:10:38 +0530

அதற்கு வாதி அருண்பாண்டி காசு இல்லை என்று கூற, அதையே விரோதமாக கொண்டு, எதிரி வாதி அருண்பாண்டியை பார்த்து எனக்காடா காசு இல்லை என்று சொல்கிறாய், நீ வீட்டுக்கு போகமாட்டாய் என்று சொல்லி, கடை அருகில் கிடந்த விறகு கட்டையை எடுத்து, அருண்பாண்டியின் தொடையில் அடித்து நெஞ்சில் குத்தி கீழே தள்ளிவிட்டு, அருகில் இருந்த பெரிய கல்லை எடுத்து வாதியின் நெஞ்சிலும், தலையிலும் தாக்கி ரத்தகாயம் உண்டுபண்ணிய குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**10)** இந்த வழக்கில் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரியை தனக்கு தெரியும் என்றும், சுமார் 10 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை 7 மணியளவில் தானும், எதிரி பிரேம் ஆனந்த் என்பவரும் புதுதாமரைப்பட்டி பஸ் ஸ்டாண்ட் அருகே நின்றுகொண்டிருந்தபோது தங்களுக்கு இடையே வாய்தகராறு ஏற்பட்டது என்றும், தாங்கள் தற்போது சமரசமாக சென்றுவிட்டார்கள் என்று அரசு தரப்புக்கு விரோதமாக பிறழ் சாட்சியம் ஆகியுள்ளார். எதிரியும் அ.சா.1-ம் சமாதானமாக சென்றுவிட்டதாக கூறி குவிமுச பிரிவு 320-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது 23.07.2026-ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**11)** அரசு தரப்பில் அ.சா.1 பிறழ் சாட்சியாக அறிவிக்க கூறி அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் "தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று நடந்த உண்மைகளை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல" என்று அரசு தரப்புக்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** அ.சா.1 அரசு தரப்பில் பிறழ் சாட்சி ஆகியுள்ளதால் அ.சா.2 தமிழ்செல்வம் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனியப்பன் ஓய்வு பெற்றுவிட்டபடியாலும், இவ்வழக்கின் மேல்விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் சிவாஜிகணேசன் பணி மாறுதலில் சென்றுவிட்டதாலும், வழக்கு தரப்பினர்கள் நீதிமன்றத்திற்கு வெளியே பேசி சமாதானம் ஆகிவிட்டதாலும், அதன் அடிப்படையில் அரசு தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டபடியால், வழக்கு 10 வருடகாலமாக நிலுவையில் இருந்து வருவதனால் நீதியின் நலன் கருதி வழக்கின் விசாரணையை விரைந்து முடிப்பதற்காக அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311-ன் கீழ் கூடுதல் சாட்சியாக விசாரிக்க மனு தாக்கல் செய்யப்பட்டு மாண்பமை நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில் வழக்கு கோப்பினை பார்த்து ஆவணங்களின் அடிப்படையில் தான் தற்போது கூடுதல் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறார் என்றும், கடந்த 29.01.2016-ம் தேதி 21.30 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனியப்பன் நிலைய பொறுப்பில்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.19 08:10:44 +0530

இருந்தபோது புகார்தாரர் அருண்பாண்டியன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண்.57/2016, பிரிவுகள் 294(பி), 324, 506(2) இ.த.ச-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், புகார் மனு அ.சா.ஆ.2 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரவிக்குமார் மற்றும் ரஞ்சித்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் சார்பு ஆய்வாளர் அன்றையதினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் அருண்பாண்டியன், பாபு ராஜீவ்பாண்டி, ஜெயராமன், ரவிக்குமார், ரஞ்சித்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், எதிரி மாண்புமிகு, மதுரை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றுள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கினை சார்பு ஆய்வாளர் சிவாஜிகணேசன் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சிறப்பு சார்பு ஆய்வாளர் விசாரித்த அனைத்து சாட்சிகளையும் விசாரணை செய்ததில் சாட்சிகள் அவரிடம் கூறியதுபோலவே சார்பு ஆய்வாளரிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், பின்னர் இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து 15.09.2016-ம் தேதி எதிரிக்கு எதிராக பிரிவுகள் 294(பி), 324, 506(2) இ.த.ச-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியமளித்துள்ளதால், அரசு தரப்பு வழக்கறிஞர் மற்ற சாட்சிகளை விசாரிக்காமல் விலக்கிக் கொண்டார். அதனால் அரசு தரப்பில் எதிரியின் குற்ற செயலானது உறுதி செய்யப்படவில்லை.

**14)** விசாரணை அதிகாரியான அ.சா.2-ஐ ஒத்துரைத்து புகார்தாரரான அ.சா.1 சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் எதிரி, அ.சா.1-ஐ தகாத வார்த்தையால் பேசி, அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்பதற்கு எந்தவொரு சாட்சிகளும் இல்லை. மேலும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எவ்வித சான்று பொருட்களையும் வெளி கொணரப்படவில்லை என்பதாலும் அ.சா.2-ன் சாட்சியம் வழக்கின் புலன்விசாரணை குறித்து மட்டுமே அமைந்துள்ளது என்பதாலும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.19 08:10:48 +0530

**15)** முடிவாக, இந்த வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 324-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**16)** இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026- ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.19 08:10:53 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் |
|---|---|---|
| அ.சா.1 | 23.07.2026 | அருண்பாண்டியன் |
| அ.சா.2 | 17.08.2026 | தமிழ்செல்வம் |

<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> :-

| வரிசை எண் | குறியீடு செய்யப்பட்ட சாட்சி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1 | புகார் மனுவில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | அ.சா.2 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | அ.சா.2 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | அ.சா.2 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | அ.சா.2 | மாதிரி வரைபடம் |

<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:- இல்லை</u>

<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>,

<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>**:** இல்லை

<u>குறிப்பு</u>

1) வழக்கு விசாரணைகாலத்தில், எதிரி நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது

4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.19 08:10:58 +0530